1993 ஏப்ரல் 8]
282—

தமிழ்நாட்டில் உலகத் தமிழ் மாநாடு நடத்துதல்

*15037—திரு. கே. செல்வராஜ்:
திரு. கா. பூ. முனுசாமி:

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மீண்டும் உலகத் தமிழ் மாநாடு நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) அரசு சார்பில் நடத்தப்படின் கோயம்புத்தூரில் நடத்த திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது நடத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) இப்பொருள் இன்னும் அரசின் ஆய்வில் உள்ளதால் எந்த இடத்தில் நடத்துவது என்பது குறித்து முடிவு எடுக்கப்படவில்லை.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, திராவிட இயக்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகுதான் தமிழ் மொழிக்கு உரிய மரியாதை கிடைத்திருக்கிறது. அதன் அடிப்படையில் பேரறிஞர் அண்ணா பெருந்தகை அவர்களும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும் சென்னையிலும், மதுரையிலும் விழா எடுத்தார்கள். அவர்களின் வழித் தோன்றலாக, திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியாக திகழ்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் நமது மொழிப் பற்றையும் நாம் நமது தலைவர்கள் மீது கொண்டுள்ள விசுவாசத்தையும் வெளி உலகத்திற்கு தெரியப்படுத்துகின்ற வகையில் பிற மொழி அறிஞர்களையும், பிற மாநில முதல்வர்களையும் இந்த மாநாட்டுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அழைப்பார்கள் என்பதோடு ஔவை வாழ்ந்த மண், இன்று நல்லாட்சி நடத்துகின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தத்து எடுத்துக்கொண்ட மண், ஆகவே தர்மபுரி மாவட்டத்தில் இந்த மாநாட்டை நடத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியை கோவையில் நடத்த திட்டம் உள்ளதா என்று கேட்டுவிட்டு இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தர்மபுரியில் நடத்த முடியுமா என்று கேட்கிறார்கள். காலமும், இடமும் இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1993 ஏப்ரல் 8

முற்பகல் 10-05

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தமிழகத்திலே நடைபெற இருக்கிறது என்று நிதிநிலை அறிக்கையிலே தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததற்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாடு கோயம்புத்தூர் அல்லது தமிழகத்தினுடைய மத்திய பகுதியாக இருக்கின்ற திருச்சிராப்பள்ளியில் நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்றும், மேலும் இந்தியாவினுடைய பொதுமொழியாகவும், ஆட்சிமொழியாகவும் இருப்பதற்கு தகுதி பெற்ற ஒரே ஒரு தொன்மை வாய்ந்த மொழி தமிழ்மொழிதான் என்று இந்திய அரசியல் நிர்ணயச் சபையிலே ஆணித்தரமாக முதன் முதலில் எடுத்துக் கூறி குரல் கொடுத்த கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களை கௌரவிக்கும் பொருட்டு, வருகின்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிலே, தஞ்சாவூரிலுள்ள தமிழ் பல்கலைக் கழகத்திற்கு கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் பெயர் சூட்டப்படுமா? மாநாட்டையொட்டி அந்தப் பெயர் சூட்டப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரா திருச்சியா, தர்மபுரியா அல்லது வேறு எந்த ஊர் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. அப்படி யோசிக்கின்றபோது இந்த ஊர்களையெல்லாம் நான் நினைவிலே வைத்துக் கொண்டு அந்த ஆலோசனைக் கூட்டத்திலே சொல்லுகிறேன். மற்றபடி தமிழ் பல்கலைக் கழகத்திற்கு உ. வே. சாமிநாதஐயர் பெயர் வைக்க வேண்டுமென்று ஒரு பிரிவினர் கேட்கிறார்கள். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திருமதி மரியம் உல் ஆசியா அவர்கள் காயிதே மில்லத் அவர்களுடைய பெயர் வைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். வேறு சிலர் வேறு பெயரைக் கூட வைக்கவேண்டுமென்று கேட்கலாம். ஆனால் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு நாம் வைத்திருக்கின்ற பெயர் ''தமிழ்'' என்பதே அந்த பல்கலைக் கழகத்திற்கு வைக்கப்பட்டிருக்கிற பெயர் தான். ஆகவே, தமிழ்ப் பல்கலைக் கழகம் என்றே இருக்கட்டும். அப்பொழுதுதான் தமிழினுடைய பெருமை உலகம் முழுவதும் தெரிவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று சொல்லப்படுகின்ற கொங்கு மண்டலமாம் கோவையில் உலகத் தமிழ் மாநாடு நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான் கேள்வியிலேயே இருக்கிறது. வேறு ஏதாவது கேட்டிருக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானே கோயம்புத்தூரைச் சார்ந்தவனாக இருக்கிற காரணத்தால் இந்தத் தகுதி கோயம் புத்தூருக்கு இல்லையென்று என்னாலே சொல்ல முடியாது. ஆனால் எந்த ஊரிலே நடத்தப் போகிறோம் என்பது இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் அந்த முடிவை எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு தமிழ் விளையாடும் கோவை நகரத்தில் உலகத் தமிழ் அறிஞர்களையெல்லாம் அழைத்து எட்டாவது தமிழ் மகாநாட்டை நடத்தினால் சாலப் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால், மதுரையில் நடத்தி விட்டார்கள். சென்னையிலே பல மகாநாடுகள் நடந்தேறிவிட்டன. ஆகவே, கோவையில் அந்த மகாநாட்டை நடத்தினால் சாலப் பொருத்த மாக இருக்கும். அந்த மாநாட்டை இந்த ஆண்டில் நடத்து வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரிலே நடத்த வேண்டுமென்கிற மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இந்த ஆண்டு நடத்த முடியுமா என்பது, இப்பொழுது இந்த மாநாட்டைப் பற்றி நாம் பேசுகிறபோது பலரும் வெளியில் நடக்கின்ற அந்த ஊர்வலத்தையும், வெளியிலே பந்தலிலே நடைபெறுகிற பல் வேறு நிகழ்ச்சிகளையும் மனதிலே வைத்துத் தான் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்பது எனக்கு ஒருவாறு புரிகிறது. ஆனால் உலகத் தமிழ் மாநாடு என்பது, ஆராய்ச்சி கருத்தரங்காக ஒன்று நடைபெறும். அதுதான் அந்த மாநாடு என்பது. அதற்கு உலகம் முழுவதும் இருக்கிற தமிழ் அறிஞர்களெல்லாம் வர வேண்டும். ஆகவே, அவர்களுக்கெல்லாம் கடிதம் எழுதி, அவர்களுக்கு எந்த மாதம் பொருத்தமாக இருக்கிறதோ அந்த மாதத்தில்தான் நாம் அந்தக் கருத்தரங்கை நடத்த வேண்டும். அதுதான் அந்த மாநாட்டிற்கே உயிர் போன்றது. அதற்கென்று ஒரு அமைப்பு இங்கே இருக்கிறது. சர்வதேச, உலகளாவிய ஒரு ஆராய்ச்சி நிறுவனம் இருக்கிறது. அவர்கள்தான் அதை நடத்துவார்கள். அந்தக் கருத்தரங்குக்கு வருகின்ற அறிஞர் பெருமக்களுக்கு எந்த மாதம் உகந்ததாக இருக்கிறதோ அந்த மாதத்தில் நாம் நடத்தினால்தான் அந்த ஆய்வரங்கம் நடை பெறும். அந்த ஆய்வரங்கம் நடைபெற்றால்தான் இது உலகத் தமிழ் மாநாடு என்ற பெயரைப் பெற முடியும். ஆகவே,

அவர்களுடைய வசதியைப் பொறுத்து, அந்தக் காலத்தை நிர்ணயித்து, காலத்தை நிர்ணயித்ததற்குப் பிறகு, இடத்தை நாம் நிர்ணயிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ச.ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலுள்ள யூதர்களையெல்லாம் ஒன்றுகூட்டி யூதர்கள் மாநாடு நடத்தியதைப் போல, இன்றைக்கு தமிழகத்தின் தலைவியாக விளங்குகின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே, நம் தமிழ்நாட்டிலுள்ள, சிறப்பான மத்தியப் பகுதியாக விளங்கின்ற திருச்சிராப்பள்ளியிலே உலகத் தமிழர்களை ஒன்று கூட்டுகின்ற அந்த உலகத் தமிழ் மாநாட்டை நடத்துவதற்கு அடுத்த ஆண்டிலாவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உலகத் தமிழர்கள் மாநாடு அல்ல; உலகத் தமிழ் மாநாடு. இந்தத் தமிழ் மாநாட்டிலே நடைபெறுகின்ற அந்த முக்கியமான ஆய்வரங்கத்திற்கு கருத்தரங்கத்திற்கு, வேற்று நாட்டைச் சார்ந்த, வேற்று மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழறிஞர்கள், தமிழ் பற்றித் தெரிந்த அறிஞர்கள் பலரும் பல்வேறு நாடுகளிலிருந்து வரவிருக்கின்றார்கள். அவர்களெல்லாம் கலந்து கொள்கிற அந்த ஆய்வரங்க நிகழ்ச்சிக்குப் பெயர்தான் மாநாடு என்பது. ஆகவே, தமிழ் மாநாடாக இருக்கிற காரணத்தால் உலகம் முழுவதும் இருக்கிற தமிழறிஞர்கள் வந்துகூடுகின்ற ஒரு சந்தர்ப்பமாகவும் அது தொடர்ந்து இருந்து வருகிறது. அந்த முறையிலே இந்த மாநாடு உலகத் தமிழ் மாநாடாக நடைபெற்றாலும் உலகத் தமிழர்கள் எல்லாம் வந்து கலந்து கொள்கிற ஒரு மாநாடாகச் சிறப்பான முறையிலே நடத்த வேண்டுமென்றுதான் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விரும்புகிறார்கள். அதற்கான நடவடிக்கைகளை எடுக்கச் சொல்லி ஆணையிட்டிருக்கிறார்கள். காலத்தை, எப்பொழுது நடத்துவது என்று முடிவெடுத்ததற்குப் பிறகு - அதுதான் மிக முக்கியமானதாகும். அதற்குப் பின்னர் இடத்தைப் பற்றி பரிசீலனை வருகின்றபொழுது திருச்சியைப் பற்றியும் நான் யோசிக்கின்றேன். அந்த ஆலோசனைக் குழுவிலே நான் அந்தக் கருத்தைச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மதுரையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக

1993 ஏப்ரல் 8]

இருக்கின்றபொழுது உலகத் தமிழ் மாநாடு நடத்துகின்றபொழுது, தமிழறிஞர்களைச் சிறப்பிக்கின்ற வகையில் அவர்களுக்கெல்லாம் திருவுருவச் சிலை நிறுவப்பட்டது. அந்தத் திருவுருவச் சிலை மிகக் குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்டதால் சில குறைபாடுகள் இருக்கின்றன என்று இதய தெய்வம் புரட்சித் தலைவரிடம் அன்றைய தினம் சுட்டிக் காட்டப்பட்ட பொழுது அவைகளெல்லாம் மீண்டும் திருத்தி அழகாக வடிவமைக்கப்படும் என்று ஒரு வாக்குறுதியைத் தமிழக மக்கள் மத்தியிலே பத்திரிகை வாயிலாகக் கொடுத்தார்கள். இப்பொழுது நடத்தவிருக்கிற உலகத் தமிழ் மாநாட்டுக்கு முன்பு அந்தத் திருவுருவச் சிலைகளை மிக அழகாக சிற்பிகளைக் கொண்டு சித்தரிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு வாக்குறுதி தந்திருப்பார்களேயானால் அதை நிச்சயமாக இந்தத் துறை எடுத்துச் செயல்படுத்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ச் சமுதாயம் ஒரு காலத்திலே கேட்பாரற்று அடிமைப்படுத்தப்பட்டு, நசுக்கப்பட்டு, நலிவுற்ற நிலையிலே, இனி தலைதூக்க முடியாது என்று விரக்தி மனப்பான்மையுடன் இருந்த நேரத்தில், இதோ விடிவெள்ளி முளைத்ததுகாண் என்று ஈரோட்டிலேயிருந்து கிளம்பிய விடிவெள்ளி, தன்னுடைய 95 வயது வரையில் ஏறத்தாழ எழுபதாண்டுக் காலம் பொது வாழ்க்கையிலே ஈடுபட்டு, தள்ளாடி தடியூன்றுகின்ற நிலையிலேயும் நோய் ஒவ்வொரு நொடியும் அவரைத் துன்புறுத்திக் கொண்டிருந்த நிலையிலேயும் அந்த நோயைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் இடைக் காலத்திலே தமிழகத்திலே பரவி விட்ட தொற்று நோயை விரட்டுவதற்காக இரவென்றும் பகலென்றும் பாராமல் கண் துஞ்சாமல் இயங்கிய இந்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளர், விடுதலை வீரர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் தமிழுக்காகச் செய்த சேவையை நாடறியும்; நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அப்படிப்பட்ட உத்தமத் தலைவன் பிறந்த அந்தத் தமிழ் மண் பெரியார் மாவட்டம். அங்கே இந்த உலகத் தமிழ் மாநாட்டை நடத்துவதற்குக் கருணையுள்ளத்தோடு தாங்கள் அனுமதி வழங்குவீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விபூதி, குங்குமம் வைத்து பெரியசாமி இவ்வளவு அழகாகப் பெரியாரைப் பற்றிப் பேசுவதால் அவர் பாராட்டுக்குரியவர்தான்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்கள் தந்தை பெரியார் அவர்களைப் பற்றிப் பெருமையாகப் பேசினார்கள். அதை நான் அப்படியே ஏற்றுக் கொள்ளுகின்றேன். அவர் பெரியார் மாவட்டத்திலே குறிப்பாக ஈரோட்டிலே இந்த மாநாட்டை நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே, போகிற போக்கைப் பார்த்தால் எல்லா உறுப்பினர்களும் தங்கள் ஊரிலே நடத்த வேண்டுமென்று கேட்பார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆகவே, அப்படிக் கேட்பதாக வைத்துக் கொண்டு எல்லா ஊர்களைப் பற்றியும் அந்த ஆலோசனைக் கூட்டத்திலே பரிசீலிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா ஊர்களைப் பற்றியும் பரிசீலிக்கிறோம் என்று அமைச்சர் சொல்லிவிட்டார். எனவே, மற்றவர்களெல்லாம் கையைக் கீழே போடலாம். (சிரிப்பு)

வினா எண் 283 திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

283

மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனைகளில் தடய அறிவியல் ஆய்வகம்

*9326 *திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களில் உள்ள தலைமை அரசு மருத்துவ மனைகளில் தடய அறிவியல் ஆய்வகம் (Forensic Science Laboratory) அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயல்படதுவங்கும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களில் உள்ள தலைமை அரசு மருத்துவமனைகளில் இந்தத் தடய அறிவியல்